இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 02 | திகதி : 16.02.2025 | விலை : 50.00

## உலக ஆயர் மாமன்ற கூட்டொருங்கியக்க மாநாட்டின்
## யாழ்ப்பாண மறைமாவட்ட செயலமர்வு



உலக ஆயர் மாமனற கூட்டொருங்கியக்க மாநாட்டின் நிறைவு ஏட்டை மையமாகக் கொண்டு யாழ். மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மறைமாவட்டச் செயலமர்வு கடந்த 12ம் திகதி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்** அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கனடா றொறன்ரோ பல்கலைக்கழகப் பேராசிரியர் அருட்தந்தை அ. சந்திரகாந்தன் அவர்கள் கலந்து கூட்டொருங்கியக்கத் திரு அவை பற்றிய அறிமுக உரையையும், அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அவர்கள் நிறைவு ஏட்டின் முன்னுரை மற்றும் பகுதி ஒன்று பற்றியும், சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தலப் பரிபாலகர் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஜெகன்குமார் கூஞ்ஞ அவர்கள் அவ்வேட்டின் 2ஆம், 3ஆம் பகுதிகள் பற்றியும், மன்னார் மறைமாவட்ட அருட்தந்தை கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அவர்கள் பகுதிகள் 4, 5 பற்றியும் விளக்கவுரைகள் வழங்கினார்கள். தொடர்ந்து பொது மற்றும் குழுக்கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. இந்நிகழ்வில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர், குருமட மாணவர்களென 450 வரையானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## வேதசாட்சிகள் மண்ணின் முதல் ஆயர்
## திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு



மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கடந்த மார்கழி மாதம் 14ஆம் திகதி நியமனம்பெற்ற, அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களின் ஆயர் திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு எதிர்வரும் 22ஆம் திகதி, சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மடுத்திருத்தலத்தில் நடைபெற ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இத்திருச்சடங்கில் ஏனைய மறைமாவட்ட ஆயர்களும் பங்குபெறவுள்ளதுடன் புதிய ஆயராகத் திருநிலைப்படுத்தப்படும் பேரருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுக்கும் நிகழ்வானது எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து ஆயர் அவர்களினால் அவருடைய பங்காகிய அடம்பன் மூங்கில் முறிச்சான், புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் மாசி மாதம் 26ம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு நன்றித் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. புதிய ஆயருக்காக இறைவலுக்கு நன்றி கூறுவதுடன் அவர் ஏற்கவுள்ள புதிய பணிக்காக இன்நாட்களில் இறைவனிடம் மன்றாடுவோம்.

**இறையாசீர் உங்களோடு இருப்பதாக.**

## 175வது ஆண்டு நிறைவில்
## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதன் 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல சிறப்புநிகழ்வுகள் கல்லூரியில் முன்னெடுக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் நிலையில் அது தொடர்பான ஊடக சந்திப்பொன்று 14ஆம் திகதி அங்கு நடைபெற்றது. இச்சந்திப்பில் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் மற்றும் பிரதி அதிபர் திரு. ஜக்சன் அவர்களும் கலந்து கொண்டு நிகழ்வுகள் தொடர்பாக விளக்கமளித்து இவற்றில் பங்குபற்றும் படி கல்லூரியின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பில் உரையாற்றிய அதிபர் அவர்கள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் பழைய மாணவர்களை மையமாக கொண்ட முதல் கட்ட நிகழ்வுகள் இம்மாதம் 27, 28, பங்குனி 01ஆம் திகதிகளில் தங்க அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியும் பங்குனி மாதம் 14ஆம் திகதி பற்றிசியன் நடைபவனியும், 15ஆம் திகதி வெளி நாடுகளைச் சேர்ந்த பழைய மாணவர்களுக்கான துடுப்பாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளதெனவும் தெரிவித்துள்ளார். பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு தினத்தை மையப்படுத்தி ப.2

## அமலமரித் தியாகிகள் யாழ் மாகாணத்தின்
## உயர் பேரவைக் கூட்டம்



அமல மரித்தியாகிகள் யாழ் மாகாணத்தின் உயர் பேரவைக் கூட்டம், மாகாண முதல்வர் அருட் தந்தை போல் ஜெயந்தன் பச்சேக் அமதி அவர்களின் தலைமையில் மாசி மாதம் 16ம் திகதி அன்றுஅமதிகளின் மன்னார் ஞானோதய இல்லத்தில் ஆரம்பமாகியது. இம் மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வில் யாழ் ஆயர் பேரருட்தந்தை ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை லயனல் பிடலிஸ் இம்மாணுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களும், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் மார்சல் அன்ராடி அமதி ஆண்டகை அவர்களும், அவர்களோடு யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார், மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட் தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார் அவர்களும்,கலந்து சிறப்பித்தனர். இவ் உயர் பேரவைக் கூட்டத்தில் வழிகாட்டியாக யேசுசபை அருட்பணியாளர் ஜெயராஜ் ராசையா அடிகளாரும் கலந்து நெறிப்படுத்தினார். ஆரம்ப நாள் நிழ்வில் விருந்தினர்கள், அமல மரித்தியாகிகளின் பொதுநிலை உறுப்பினர்களின் வரவேற்பு நடனத்தினுடாக வரவேற்கப்பட்டார்கள், தொடர்ந்து திருத்தந்தையின், மறைபரப்பு அமதிகள், மற்றும் மறைபரப்பு அமதிகளின் யாழ் மாகாண, கொடிகள் ஏற்றப்பட்டன. சிற்றாலயத்தின் முன்றலில் மாலைவழிபாடும் நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றது. நாற்கருணை ஆசீரை மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் வழங்கினார்கள். நிறைவாக இறையாசிருடன், 2025ம் யூபிலி ஆண்டில் அமதிகளின் 7 வருடத்திற்கு ஒருமுறை 3 நாட்கள் நடைபெறும் உயர் பேரவைக் கூட்டம் ஆரம்பமாகியது. இப்பேரவையில் 85க்கும் மேலான யாழ் மாகாண மறைபரப்பு அமல மரித்தயாகிகள், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பங்கெடுத்தார்கள்.

## இயக்கச்சி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்
## யாழ் . ஆயரால் திறந்து வைப்பு





புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இயக்கச்சி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. புதிய ஆலயத்தில் யாழ். ஆயர் அவர்கள் ஞாயிறு திருப்பலியை ஒப்புக்கொடுத்து வழிபாடுகளை ஆரம்பித்து வைத்தார். இவ்ஆயலயத்தின் கட்டிட நிர்மானப் பணிக்கான முழுநிதியினையும் யாழ் ஆயர் அவர்களே வழங்கியிருந்தார். இப்புதிய ஆலயத்தின் கட்டிட நிர்மான பணிகளை கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்பணி அ.அ. அமல்ராஜ் அடிகளார் பெறுப்பேற்று நிறைவேற்றினார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், கட்டைக்காடு பங்கு மக்கள், பொது மக்கள், 52 வது இராணுவபடைப்பிரிவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும்.

வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவு மக்கள் தொடர்ந்தும் கஸ்டங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். 2022 பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு மீண்டாலும் மக்கள் அன்றாட வாழ்க்கைக் கஸ்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. பொருட்களின் விலை மின்சாரத் துண்டிப்பு ஒருப்பக்கம் அத்தியாவசியப் அதிகரிப்புகள் மற்றும் தேங்காய்த் தட்டுப்பாடும் தேங்காய் விலை அதிகரிப்பும் மக்களுக்குப் பெருமசுமையாகவுள்ளன. இதற்கு அரசாங்கம் ஒவ்வொரு காரணங்களைச் சொன்னாலும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. “மாற்றம்“ “சோசலிசம்” என்றெல்லாம் சொல்லிக் கொண்டு பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் தற்போது பொருளாதார பிரச்சினைகளைச் சமாளிக்கத் தடுமாறுகின்றது. போல் தெரிகிறது. இன மாத வேறுபடுகள் இன்றி அனைத்து மக்களும் எதிர் நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். ஏனெனில் முன்னைய அரசாங்கங்கள் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டியும் குற்றம் சுமத்தியும் பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீண்டும் அதே தவறுகளைச் செய்ய முற்படக்கூடாது.

இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடித் தீர்வுக்காக சர்வதேச நாணய நிதியம் அப்போது முன்வைத்த சில பரிந்துரைகளை எதிர்க்கட்சியில் இருந்தபோது எதிர்த்த தேசிய மக்கள் சக்தி, அரசாங்கத்தை அமைத்ததும் அந்த எதிர்ப்புகளைக் கைவிட்டு சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும் நிலை தென்படுகின்றது. குறிப்பாக சாதாரண பொது மக்கள் மீது சுமத்தும் வரிகளை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற பரிந்துரைகளை அரசாங்கம் இன்னும் சில மாதங்களில் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் நட்டமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தவும் புதிய அரசாங்கம் மறைமுக ஏற்பாடுகளைச் செய்வதாக அறிய முடிகின்றது.

ஆனால் நட்டமடையும் அரச நிறுவனங்களை லாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றுவோம் என்று தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்தபோது மார் தட்டியிருந்தது. அப்போது பதவியில் இருந்த அரசாங்கத்தின் மீதும் காரசாரமான குற்றச் சாட்டுக்களையும் தேசிய மக்கள் சக்தி முன்வைத்திருந்தது.

அதுமாத்திரமல்ல மக்களை ஒன்றுதிரட்டி எதிர்ப்பு போராட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி ஈடுபட்டிருந்தது. ஆனால் தற்போது மறைமுகமாகவும் ஏதோவொரு வழியிலும் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற முற்படுவதாகவும் மேலும் அமெரிக்க இந்திய அரசுகளின் திட்டங்களுக்கு இணங்கியுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. அதேநேரம் சீனாவுக்குத் தேவையான இடங்களை இலங்கைத்தீவில் வழங்கவும் இணங்கியுள்ளதாகவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த விடயங்கள் பற்றி பிரதான எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்தினாலும் அதன் உண்மைத் தன்மைள் பற்றி மக்கள் நன்கு அறிந்துகொள்வர். ஏனெனில் தற்போதையை எதிர்க்கட்சிகள் என்பது முன்னைய கூட்டு ஆட்சியாளர்கள்தான். ஆகவே அவர்கள் தேசிய அரசாங்கத்தின் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை மக்கள் அப்படியே நம்புவதற்குத் தயாராக இல்லை. இருந்தாலும் பொறுப்புடன் செயற்படும் சில அரச உயர் அதிகாரிகள் வெளிப்படுத்தும் தகவல்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தும் கருத்துக்கள் ஆபத்தாகத் தெரிகின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி புதிய ஒப்பந்தங்களைச் செய்யவுள்ளதாக அரசாங்கம் கூறினாலும் புதிய ஒப்பந்தங்களிலும் மக்கள் மீது மேலும் வரிகளை அதிகரிக்கும் ஏற்பாடுகள் இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கேள்விகள் எழுவது இயல்பானது.என்ன காரிய ஏனெனில் மக்கள் பல அனுபவங்களைக் கண்டவர்கள். அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றமடைந்தவர்கள். ஆகவே இக் காரண அடிப்படையில் மக்களின் சந்தேகங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஜனாதிபதிக்கும் உண்டு.

அதேநேரம் இனப் பிரச்சினைக்குரிய நிரந்தர அரசியல் தீர்வு என்ன என்பது பற்றியும் வெளிப்படைத் தன்மையுடன் அரசாங்கம் அறிவிக்க வேண்டும். ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் முன்னைய அரசாங்கம் போன்று ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய விவகாரங்களை உள்ளக பிரச்சினையாக மாற்றி மீண்டும் ஏமாற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடாது.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ். மறைமாவட்ட குருக்களுக்கான பணித்தள இடமாற்றங்கள்

யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் சிலருக்கான பணித்தள இடமாற்றங்கள் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் வழங்கப்பட்டுள்ளது. இப் பணித்தள இடமாற்றங்களானது பெப்ரவரி மாதம் முற்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக ஆயர் இல்ல செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது. பணித்தள இடமாற்றம் பெறும் குருக்களின் விபரங்கள் பின்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| அருட்பணி J. J. மவுலிஸ் | - பங்குத்தந்தை - புனித செபமாலை அன்னை ஆலயம், கொழும்புத்துறை<br>பங்குத்தந்தை - புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நல்லூர் |
| அருட்பணி R.H. சகாயநாயகம் | - பங்குத்தந்தை - புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், சுண்டுக்குழி |
| அருட்பணி B.F. இராஜசிங்கம் | - முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர்<br>- பங்குத்தந்தை - புனித பேதுருவானவர் ஆலயம், முல்லைத்தீவு |
| அருட்பணி S. அஜந்தன் | - பங்குத்தந்தை - புனித சூசையப்பர் ஆலயம், புதுக்குடியிருப்பு |
| அருட்பணி S. எட்வின் நரேஸ் | - பங்குத்தந்தை - புனித அன்னாள் ஆலயம், சிலாவத்தை |
| அருட்பணி B.J.A. பிறாயன் | - மேற்படிப்பு - இந்தியா |
| அருட்பணி J. ஜோண் குரூஸ் | - இயக்குநர் - இளையோர் ஆணைக்குழு |
| அருட்பணி F.R. நிதர்சன் | - உதவிப் பங்குத்தந்தை - யாழ் மரியன்னை பேராலயம் |
| அருட்பணி M. நிக்சன் கொலின்ஸ் | - பங்குத்தந்தை - புனித அந்தோனியார் ஆலயம், சுன்னாகம் |
| அருட்பணி A. அகஸ்ரின் | - பங்குத்தந்தை - புனித மிக்கேல் ஆலயம், உரும்பிராய் |
| அருட்பணி A. P. அன்ரனிப்பிள்ளை | - பங்குத்தந்தை - புனித பேதுரு பவுல் ஆலயம், நாரந்தனை |
| அருட்பணி S. அலின் கருணாகரன் | - பங்குத்தந்தை - புனித அந்தோனியார் ஆலயம், குமுழமுனை |
| அருட்பணி R. றெனால்ட் | - பங்குத்தந்தை - புனித சவேரியார் ஆலயம், தர்மபுரம் |
| அருட்பணி M. பத்திநாதர் | - பங்குத்தந்தை - புனித மரியன்னை ஆலயம், கோப்பாய்<br>பங்குத்தந்தை - புனித சவேரியார் ஆலயம், திருநெல்வேலி |
| அருட்பணி S. லியோ ஆம்ஸ்ரோங் | - பங்குத்தந்தை - புனித கதிரைமாதா ஆலயம், சில்லாலை |
| அருட்பணி வரதன் குரூஸ் OMI | - பங்குத்தந்தை - கர்த்தர் ஆலயம், மணியந்தோட்டம் |
| அருட்பணி ஞானநேசன் SSS | - பங்குத்தந்தை - புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், விளான் |

# துயர்பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் கோப்பாய் மற்றும் திருநெல்வேலிப் பங்குகளின் பங்குத்தந்தையுமான அருட்பணி மடுத்தீன் பத்திநாதர் அவர்களின் அன்புத் தாயாரும், புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் அருட்பணி துஷ்யந்தன் அடிகளாரின் பேத்தியுமாகிய **மடுத்தீன் ஞானப்பு** 03.02.2025 - திங்கட்கிழமை அன்றும் அருட்தந்தை பத்திநாதர் அடிகளாரின் சகோதரியாகிய **தங்கராஜா செபமாலை** அவர்கள் 05.02.2025 - புதன்கிழமை அன்றும் இறைவனடி சேர்ந்துள்ளனர். இவ் இருவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அருட்தந்தை யர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினர், உறவினர்களுக்கும் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

# கல்வாரிப்பூங்கா - வவுனிக்குளம்

## 2025 – யூபிலி ஆண்டில் தவக்கால திருயாத்திரை வழிபாட்டு ஒழுங்குகள்

| | |
|---|---|
| 08.03.2025 | **- சனிக்கிழமை இளவாலை மறைக்கோட்டம்** |
| காலை 9.00 மணி | சிலுவைப்பாதை. நற்கருணை வழிபாடு.பாவசங்கீர்த்தனம். திருப்பலி |
| 15.03.2025 | **- சனிக்கிழமை கிளிநொச்சி மறைக்கோட்டம்** |
| காலை 9.00 மணி | சிலுவைப்பாதை. நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம். திருப்பலி |
| 22.03.2025 | **- சனிக்கிழமை தீவகம், பருத்தித்துறை மறைக்கோட்டங்கள்** |
| காலை 9.00 மணி | சிலுவைப்பாதை. நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம், திருப்பலி |
| 29.03.2025 | **- சனிக்கிழமை யாழ்ப்பாணம் மறைக்கோட்டம்** |
| காலை 9.00 மணி | சிலுவைப்பாதை. நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம், திருப்பலி |
| 05.04.2025 | **- சனிக்கிழமை முல்லைத்தீவு மறைக்கோட்டம்** |
| காலை 9.00 மணி | சிலுவைப்பாதை. நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம், திருப்பலி |
| 12.04.2025 | **- சனிக்கிழமை பொது** |
| காலை 9.00 மணி | சிலுவைப்பாதை. நற்கருணை வழிபாடு, பாவசங்கீர்த்தனம், திருப்பலி |

### A-9 வீதியால் பயணிப்போர் கவனத்திற்கு

மாங்குளம் சந்தி → ஒட்டறுத்தகுளம் சந்தி → வவுனிக்குளம் வீதி → கல்வாரிப்பூங்கா

### A-32 வீதியால் பயணிப்போர் கவனத்திற்கு

வெள்ளாங்குளம் சந்தி → துணுக்காய் வீதி→ஒட்டறுத்தகுளம் சந்தி → வவுனிக்குளம் வீதி→கல்வாரிப்பூங்கா

- **வருகை தருகின்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.**
- **தனிப்பட்ட முறையில் குழுக்களாக வருகை தர விரும்புபவர்களும் மதிய உணவு ஒழுங்கு செய்ய விரும்புவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.**

**தொலைபேசி இல. 077 850 3962** **பரிபாலகர் - மல்லாவி**

## 175வது ஆண்டு நிறைவில் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட நிகழ்வில் ஆடி மாதம் 21,22 ஆம் திகதிகளில் துடுப்பாட்ட கொண்டாட்டமும் 23ஆம் திகதி காற்பந்தாட்ட, உதைப்பந்தாட்டக் கொண்டாட்டமும் 24ஆம் திகதி பரிசளிப்பு விழாவும், 25ஆம் திகதி ஒன்றுகூடலும், 26ஆம் திகதி வர்த்தக சந்தையும் கண்காட்சியும், 27ஆம் திகதி கலாசார விழா, இசை நிகழ்ச்சி, முத்திரை வெளியீடு போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஏனைய பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்ட மூன்றாம் கட்ட நிகழ்வுகளில் சித்திரை மாதம் 23,24 ஆம் திகதிகளில் திருவிவிலிய போட்டியும், வைகாசி மாதம் 8-11 ஆம் திகதி வரை துடுப்பாட்டச் சுற்றுத்தொடரும், 16,17 ஆம் திகதிகளில் கூடைப்பந்தாட்ட போட்டியும் ஆடி மாதம் முதலாம் வாரம் தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டியும், இரண்டாம் வாரம் தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில மற்றும் தமிழ் நாடகப் போட்டியும் 19-21 தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்டச் சுற்றுத்தொடரும் நடைபெற ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# அன்பின் மகிழ்வு




## யூபிலி ஆண்டில் இறைவனின் மென்மையான அன்பைப் புரிந்து குடும்பத்தில் அதனை பிள்ளைகளுக்கு புரிய வைப்போம்.

புனித சின்னத் தெரேசாள் வாழ்க்கையில் ஒரு மாலை வேளையில் தனது தந்தை லூயிஸ் மாட்டீன் அருகே அமர்ந்த வேளையில் அவர் அளித்த அன்பு மற்றும் பாதுகாப்பு உணர்வு அவரை ஆழமாக உற்சாகப்படுத்தியது என்று குறிப்பிடுகிறார். தந்தையின் மென்மையான வார்த்தைகள் அவரின் அன்பான, பொறுமையான அரவணைப்பு கடவுளின் எல்லையற்ற அன்பை அவருக்கு என்றும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தன. குடும்பத்தில் அவர் பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொண்ட இவ்வாறான சிறிய ஆனால் ஆழமான அனுபவங்கள் அவருக்குச் சிறிய வயதிலிருந்து தெய்வீக அன்பை புரிந்து சுவைத்துக் கொள்ள வழிவகுத்தது. இந்த சின்ன தெரேசாளின் அனுபவமானது குடும்பத்திலிருக்கும் ஒவ்வொரு பெற்றோரினதும் மென்மையான அன்பானது. கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த ஊடகமாக இருக்கிறது என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

**குடும்பத்தில் பெற்றோரின் மென்மையான அன்பு**

கிறிஸ்து தனது போதனைகளில் தன்னலமற்ற அன்பானது சீடர்களின் ஓர் முன்னடையாளமாக இருக்க வேண்டும் என்று போதித்தார். “உன் மீது நீ அன்பு கூருவது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.” (மத் 22:39) இந்தத் தன்னலமற்ற அன்பு முதல்முதலில் குடும்பத்திலேயே முழுமையாக வாழப்படுகிறது வாழப்பட வேண்டும். பெற்றோர்கள் தங்களது சொற்களினாலும் செயல்களினாலும் இந்தத் தன்னலமற்ற அன்பை பிள்ளைகளுக்கு வெளிப்படுத்த அழைக்கப்படுகின்றனர். சிறப்பாக பெற்றோர்களுடைய அன்பு, பொறுமை, கரிசனை, மன்னிப்பு போன்றவற்றினூடாகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கடவுளின் தெய்வீக அன்பை வெளிப்படுத்துகின்றனர். “தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை” (யோவா 15:13) என்று யேசு அன்பின் உச்சக்கட்டத்தைத் தெளிவுபடுத்துகின்றார். எனவே பெற்றோர்கள் குடும்பத்தில் பிள்ளைகளை வளர்க்கின்ற போது கடின உழைப்பு தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் தியாகம் செய்தல் பிள்ளைகள் செய்கின்ற சிறு சிறு தவறுகளை மன்னித்தல் பிள்ளைகளை புரிந்து கொள்ளல் போன்ற செயல்களினூடாக இறைவனின் தெய்வீக அன்பைப் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இறைவனின் தெய்வீக அன்பின் ஓர் இனிமையான கனி மன்னிப்பு ஆகும். விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட ஒரு பெண்ணை யேசுவின் முன் நிறுத்தி அவருக்குத் தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொண்ட மறைநூல் அறிஞருக்கும் பரிசேயருக்கும் இயேசு கூறிய வார்த்தைகள் குடும்பத்தில் மன்னிப்பின் முக்கியத்துவத்தை எமக்கு வெளிப்படுத்துகின்றது. “உங்களில் பாவமில்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல்லெறியட்டும்” இந்த அழகான வார்த்தைகள் இயேசுவின் இரக்கத்தின் மன்னிப்பின் மகத்துவத்தை அதன் அழைப்பை நமக்கு விளக்கிகொணருகின்றது எனவே ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு இந்தத் தெய்வீக இரக்கத்தை வெளிப்படுத்தி வெறுப்பை வெல்லக்கூடிய இந்த அன்பில் அவர்களை வளர்க்க வேண்டியது மிக முக்கியமான கடமையும் பொறுப்புமாகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தம் திருமடலில் குடும்ப வாழ்வில் இருக்க வேண்டிய மென்மையான அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறுகிறார் “மென்மை என்பது ஒரு சுதந்திரமான அன்பின் குறியீடு அது கட்டாயத்தினால் அல்ல மாறாக அன்பினால் பிறரை ஏற்றுக் கொள்வதாகும்.(AL 28) “குடும்பத்தின் இதயமாக இந்த மென்மை இருந்து பிள்ளைகள் அன்பில் வளர்வதற்கு இது வழிவகுக்கும்.

**மென்மையின் வலிமை**

குடும்பத்தில் பல்வேறு சவால்களின் மத்தியில் இந்த மென்மை என்கிற பண்பு கவனிக்கப்படாமல் போகலாம். எனவே தான் மென்மை என்பது ஒரு உன்னதமான அன்பின் பரிமாணமாக திருப்பாடல் 131ல் குறிப்பிடப்படுகிறது. “தாய் மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாய் உள்ளது.” (திரு.பா 131:2) என்று நாம் கடவுளின் மென்மையான தெய்வீக அன்பில் இளைப்பாறுவது பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இந்த உருவகம் இறைவனின் தெய்வீக அன்பு நமக்கு அளிக்கின்ற உன்னதமான அன்பையும், பாது காப்பையும், அமைதியையும் அழகாக வெளிப்படுத்துகிறது. மேலும் இறைவாக்கினர் ஓசேயா, கடவுளின் அன்பின் மென்மையை இவ்வாறு அழகாக விபரிக்கின்றார். “இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோது அவன் மேல் அன்பு கூர்ந்தேன்” பரிவு என்னும் கட்டுக்களால் அவர்களைப் பிணைத்து அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன்”. (ஓசேயா 11:1,3-4) இதே போல ஒவ்வொரு குடும்பமும் உலகில் மென்மையின் உதாரணங்களாகத் திகழ வேண்டும். குழந்தைகள் தம் நாளாந்த வாழ்விலே வார்த்தைகளால் மட்டுமல்ல மாறாக தம் பெற்றோரின் அன்பான தொடுகையாலும், பராமரிப்பாலும் அவர்களின் மென்மையான அன்பைப் புரிந்து கொள்ள வழி சமைக்க வேண்டும். ஒரு எளிய அரவணைப்பு, அன்பான வார்த்தை, உறுதியான ஆதரவு என்பன ஒரு குழந்தையின் உள்ளத்தில் பாதுகாப்பு மற்றும் சொந்தம் போன்ற உணர்வுகளை அதிகரிக்கும். நம் முன்னாள் திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் அவர்களின் வாழ்க்கை இந்த அன்பின் மென்மையின் சக்தியை வெளிப்படுத்துகின்றது. அவர் திருத்தந்தையாக இருந்த போதிலும் எப்பொழுதும் குழந்தைகளை அணைத்துக் கொள்வதற்கும், குடும்பங்களின் குறைகளைக் கேட்டு அறிவதற்கும் மற்றும் துன்புறும் மக்களுக்கு அன்பைப் பொழிவதற்கும் நேரம் ஒதுக்கினார். இவ்வாறு அவரது இதயம் கடவுளின் அன்பையும் அரவணைப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

முடிவாக, குழந்தைகளை உருவாக்கி வளர்ப்பது என்பது பெற்றோர்கள் கடவுளின் படைப்பாற்றலில் நேரடியாகப் பங்கு பெறுகின்ற ஒரு உன்னதமான பங்கு பெற்றலாகும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தெய்வீக அன்பின் மென்மையில் வளர்ப்பதன் மூலம் கடவுளின் உயிர்தரும் இயல்பைப் பிரதிபலிக்கின்றனர். இவ்வாறு பெற்றோர்கள் கடவுளின் தெய்வீக அன்பின் மேன்மையை தங்கள் வார்த்தையாலும் வாழ்வாலும் பிரதிபலித்து வாழுகின்ற போது அங்கே கடவுளின் உடனிருப்பு பிள்ளைகளால் அறியப்பட்டு, வாழப்பட்டு, கொண்டாடப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் ஒரு உயிருள்ள ஆலயமாக மாறுகிறது இன்று நவீன வேகமான தொழில்நுட்ப உலகில் குடும்பங்கள் அன்பின் மேன்மையை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். வேலை, கல்வி, மற்றும் சமூக அழுத்தங்கள் குடும்பங்களில் அன்பின் மென்மையை உணர முடியாத நிலைகளை ஏற்படுத்தலாம். எந்த நிலையிலும் இயேசுவின் வாழ்வு நமக்கு ஒரு முன்னுதாரணம். அன்றாட வாழ்வில் சிறிய மேன்மையான செயல்களே அன்பை வெளிப்படுத்தப் போதுமானவை ஆகும்.

**நடைமுறை வழிகள்**

1. ஒவ்வொரு நாளையும் குடும்பத்தில் பிள்ளைகளுடன் ஒரு அன்பான வார்த்தை பாசமான அரவணைப்பு மற்றும் செபத்துடன் ஆரம்பியுங்கள்.

2.எவ்வளவுதான் வேலைப்பளுக்கள் இருந்தாலும் பிள்ளைகளுடன் ஒரு குறிப்பிட்ட அளவு நேரத்தை செலவிடும் பழக்கத்தை வழங்கப்படுத்திக் கொள்ளுங்கள். இதன் போது அவர்கள் வெளிப்படுத்துகின்ற, வெளிப்படுத்த தயங்கும் தேவைகளை புரிந்து கொள்ளுங்கள்.


3.நாளாந்த வாழ்வில் தினமும் பிள்ளைகளை மன்னித்து, பிள்ளைகளிடமிருந்து மன்னிப்பை பெற்றுக் கொள்ளும் உன்னதமான கிறிஸ்தவப் பண்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

4.நாளாந்த செபங்கள், வேதாகம வாசிப்பு, மற்றும் திருப்பலியில் கலந்து கொள்வதனூடாக குடும்பத்தை ஒரு கோவிலாக மாற்றுங்கள்.

5.அன்றாடம் வாழும் சாதாரண குடும்ப வாழ்வில் அன்பின் வெளிப்பாடாக ஒருவர் ஒருவரை மதிக்கவும், தேவைகளில் விழிப்பு, அக்கறை, கரிசனையுடனிருந்து உணர்ந்து உதவும் ஒரு அன்புக் குடும்பமாக உருவாக்குங்கள்.

---

# அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை

### மணமகள் தேவை

வயது : - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- BA
தொழில் ::- Hard ware shop and vehicle Transport
பிரதேச செயலகம் :- இணுவில்

வயது - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் ::- கடற்தொழில்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 28
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை :- O/L
தொழில் :- மெக்கானிக்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

### மணமகன் தேவை

வயது - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BA
தொழில் :- சமுர்த்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- சந்தைப்படுத்தல்
பிரதேச செயலகம்:- சண்டிலிப்பாய்

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Bachelor of Business Management (Final year)
தொழில் :- Accounts Assistant (City Medical)
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BA
தொழில் :- School Teacher
பிரதேச செயலகம் :- சொற்றகேன

வயது - 28
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - AL
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- தையல்
பிரதேச செயலகம் :- தெல்லிப்பளை


இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்
அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கங்கள்
077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.

### ஈகை குணம்

ஏதனையும் வாங்கிக் கொள்ள மட்டும் தெரிந்த நம் மூளைக்கு அருகில் கரங்கள் படைக்கப்படவில்லை. தன்னிடம் வந்து சேரும் இரத்தத்தை வாழும் நொடியெல்லாம் திருப்பி வழங்கிக் கொண்டேயிருக்கும் இதயத்துக்கு அருகில்தான் இரண்டு கைகளையும் இறைவன் படைத்தான். கைகள் ஈகைக்காகவே, வறுமை வறுத்தெடுக்கும்போது வந்து நிற்போரின் வறுமையை போக்குவோம். முடிந்தவரை உதவுவோம்.

# திரு அவைச் சட்டப் பார்வையில் கூட்டொருங்கியக்கத் திரு அவைக்கான

# இறுதி ஆவணம்






அருட்பணி மெர்லின் ரஞ்சித் அம்புரோஸ்

16-வது ஆயர் பேரவையின் இரண்டாவது அமர்வானது கடந்த அக்டோபர் 26, 2024 அன்று நிறை வடைந்தது. இதைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டுதலின்படி 155 பகுதிகளைக் கொண்ட இறுதி ஆவணமானது உடனடியாக வெளியிடப்பட்டது. இணைந்து பயணித்தல்" என் பதைப் பிரதிபலிக்கும் விதமாக. ஆயர் பேரவையின் பங்கேற்பாளர்களால் வரைவு செய்யப்பட்ட ஆவணத்திற்கு ஒப்புதல் அளித்து (திரு அவை சட்ட எண் 343), 16-வது ஆயர் பேரவையின் இறுதி ஆவணமாக (Final Document) ஏற்றுக்கொள்ளத் திருந்தந்தை பிரான்சிஸ் இசைவு தெரிவித்துள்ளார். எனவே, வழக்கமாக ஒவ்வோர் ஆயர் பேரவைக் குப்பின் வெளியிடப்படுகின்ற பேரவைக் குப் பிந்தைய திருத்தூது அறிவுரை மடல் (Post-Synodal Apostolic Exhortation) என்று எதுவும் வெளியிடப்படாது. இந்த இறுதி ஆவணம் திரு அவையில் கூட்டொருங்கியக்க வாழ்க்கை முறையை வளர்ப்பதில் திரு அவைச் சட்டத்துடன் தொடர்புடைய பல முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

காலத்தின் அடையாளங்கள் மற்றும் தேவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் கோட்பாட்டு ரீதியாகப் பொது நிலை யினருக்கான பணிகள் என்பதன் முக்கியத்துவத்தை ஆழப் படுத்த வேண்டியதன் அவசியத்தை ஆயர்களின் மாமன்றம் பலமுறை வலியுறுத்தியுள்ளது. இதன் காரணமாகப் பல இறையியல் கோட்பாடுகள் வளர்ச்சி கண்டிருக்கின்றது. இறை நம்பிக்கை யாளர்களாகிய பொதுநிலையினர் ஒவ் வொருவரும் தாம் பெற்ற திருமுழுக்கால் எழுகின்ற பொது பணிக் குருத்துவத்திற் கான அழைப்பால் உந்தப்பட்டவர்களாய் திரு அவையில் பணியாற்ற அழைக்கப் படுகின்றார்கள். இந்த அறைகூவல் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் மிக அதிகமாகவே விரவிக் கிடக்கின் றது.

இந்த இறுதி ஆவணமும், திருமுழுக்கினால் எழுகின்ற நம்பிக்கை யாளர்களின் பங்கேற்பைப் பல தளங்களில் மிகச் சிறப்பாக அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது என்பது இதன் தனிச்சிறப்பு. நிறுவப்பட்ட அல்லது நிறுவப்படாத பொதுநிலை யினருக்கான நிலையான பணிகள் மறைப்பணியை மையப்படுத்தி இயங்கும் கூட்டொருங்கியக்கத் திரு அவை குருத்துவத் திருநிலைப்பாடு தேவைப்படாத பொது நிலையினருக்கான நிலையான பணி களை (Stable Ministries) ஊக்குவிக்கின்றது. இந்தப் பொது நிலையினருக்கான பணிகள் நிறுவப்பட்ட அல்லது நிறுவப்படாத தன்மை கொண்டதாக இருக்கலாம். வாசகர், பீடப்பணியாளர் பணிகள் (Motu Proprio Spiritus Domini) மற்றும் வேதியர் பணிகள் (Motu Proprio Antiquum Ministerium) ஆகியவை வரையறுக்கப்பட்ட திருச்சடங்குகள் வழியாக வழங் கப்படும் நிறுவப்பட்ட, நிலையான பொது நிலையினருக்கான பணிகள் ஆகும்.

இந்த நிறுவப்பட்ட பணிகள் ஆயரின் ஆணையின்படி செயற்படுத்தப்படும் நிறுவப்படாத பணிகளால் முழுமை பெறுகின்றது. குறிப்பாக, அன்பியங்களை ஒருங்கிணைக்கும் பணி, குழு இறை வேண்டல்களை வழிநடத்தும் பணி, பிறரன்புச் செயல்களை ஒழுங்குபடுத்தும் பணி, ஆலோசனை வழங்கும் பணி, அடக்கச் சடங்குகளை முன்னின்று நடத்தும் பணி போன்ற உள்ளிட்ட பணிகள் இந்த நிறுவப் படாத பணிகளில் அடங்கும். இத்தகைய நிறுவப்படாத பணிகளுக்கு இறை நம்பிக்கையாளர்களின் பொதுச் சமூகத்தில் உரிய அங்கீகாரம் கிடைக்கும் வண்ணம், இதற்கான ஆணை பொதுவெளியில் வெளிப்படையாக வழங்கப்படுதலின் அவசியத்தையும் இந்த இறுதி ஆவணம் எடுத்தியம்புகின்றது.

நற்கருணை வழங்குதல், அருட்பணியாளர் இல்லாதபோது ஞாயிறு வழிபாடுகளை வழிநடத்துதல், குறிப்பிட்ட அருள்வேண்டல் குறிகளை (Sacra -mentals) நிறைவேற்றுதல் உள்ளிட்ட அசாதாரணப் பணிகள் (Extraordinary Ministries) ஊக்கு விக்கப்படுதல் வேண்டும் என்றும் இந்த இறுதி ஆவணம் எடுத்தியம்புகின்றது. எனவே, பொதுநிலையினருடைய திருமுழுக்கு அடையாளத்தையும், அது விடுக்கும் பொதுப் பணிக்குருத்துவத்துக்கான அறைகூவலையும் இந்த இறுதி ஆவணம் மிக அதிகமாகவே எண்பித்துக்காட்டுவதால், அதற்குத் தேவைப்படும் பயிற்சிகளையும் தளங்களையும் வாய்ப்புகளையும் பொது நிலையினருக்கு உருவாக்கித் தரவேண்டியது ஒவ்வொரு தலத் திருஅவையின் தலையாயக் கடமையாகும். பங்கேற்பு அமைப்புகளும் பங்களிப்பும் மறைமாவட்ட மன்றம் (Diocesan Synod தி.அ.ச.எ.460-466), மறை மாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை (Diocesan Pastoral Council தி.அ.ச.எ. 511), பங்கு மேய்ப்புப்பணி பேரவை (தி.அ.ச.எ. 536), மறைமாவட்ட நிதிக்குழு (Diocesan Finance Committee- தி.அ.ச.எ.492-494), பங்கு நிதிக்குழு (Parish Finance Committee - தி.அ.ச.எ. 537) ஆகிய பங்கேற்பு அமைப்புகளின் வழியாகப் பொதுநிலையினர் இணைப் பொறுப்பாளர்கள் (Co-Responsible) என்ற மன நிலையோடு முடிவெடுக்கும் படிநிலைகளில் (Decision-Making Processes) பங்கேற்கப் போதுமான வாய்ப்புகளைக் கட்டாயம் வழங்க வேண்டும் என்பதை இந்த இறுதி ஆவணம் மிகத் தெளிவாக வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

திரு அவைச் சட்டத்தில், இதுவரை கட்டாய மாக்கப்படாமல் விரும்பினால் அல்லது வேண்டு மென்றால் அமைத்துக்கொள்ளலாம் என்றிருந்த பங்கேற்பு அமைப்புகளான பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை, மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை இனிமேல் கட்டாயமாக்கபபட்டு, அனைத்துப் பங்குகளிலும் மற்றும் மறைமாவட்டங்களிலும் கட்டாயமாக அமைக்கப் படுவதை உறுதிசெய்ய இந்த இறுதி ஆவணம் அறிவுறுத்துகின்றது.

அத்துடன், ஏற்கெனவே திரு அவைச் சட்டம் மறைமாவட்டங்களி லும் பங்குகளிலும் கட்டயமாக அமைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகின்ற பங்கேற்பு அமைப்புகளான பங்கு நிதிக்குழு மற்றும் மறைமாவட்ட நிதிக் குழு பொதுநிலையினரின் பங்கேற்பை உறுதிப் படுத்தும் விதத்தில் அனைத்துப் பங்குகளிலும் மறைமாவட்டங்களிலும் நிறுவப்பட வேண்டும். என்றும் அறை கூவல் விடுக்கின்றது.

இதன் வாயிலாக, நிதி விடயங்களில் பங்கு மற்றும் மறை மாவட்ட அளவில் வெளிப்படைத் தன்மையும் பொறுப்புணர்வும் வெகுவாக வளரும் என்பதையும், அத்துடன், நிதி தவறாகப் பயன் படுத்தப்படுவதையும் இந்தப் பங்கேற்பு அமைப்புகளின் சரியான நடைமுறை வரையறைகள் தடை செய்யும் என்பதையும் இந்த இறுதி ஆவணம் எடுத்துக் கூறுகின்றது.

இதை உறுதி செய்யும் வகையில் மறை மாவட்டத் தனிச்சட்டங்கள் (Diocesan Particular Laws) தேவையான வரையறைகளையும் வழிகாட்டு தல்களையும் வழங்க வேண்டும் என்றும் குறித்துக் காட்டு கின்றது இந்த இறுதி ஆவணம்.

## அருள் செய் லூர்து அன்னையே!



விண்முடிசூழ் நீள்(ல)க்கச்சை தேவமகளாகி
தாளடியால் மண்ணளந்து விண்ணரசியாய்
தண்குளிரும் வான்உடுக்கள் கதிர்நிலவை
கால்பதித்து செங்கைஇரு குவித்தவளாய்
கண்ணுயர்த்திக் கைதொழுதிட்ட
“பெர்ந்தெத் தெனும்
அருமகளைக் காட்சிக்கண் தருகற்பகமே!
விண்ணவர்கள் படைசூழ குன்றணையாய்
வானரசியே! எனக்கருள்செய் “லூர்துநாயகியே”

மல்லிகையும் முல்லையும் மணக்கும்
மலைமுடி மருமலரே!
அருங்கொடியே லூர்து அன்னையே
அள்ளித்தரும் அருளூற்றை அளிக்கும் பாங்கில்
ஆங்காங்கே “கெபி கொண்ட அன்னைப் பேறே
துள்ளிவந்த “பெர்நத்திடம்” செபிக்க வேண்டி
துடிக்குமிதயம் மகிழவேண்டி காட்சி தந்தாய்.
புள்ளிகொண்ட லூர்தன்னையே!
பண்பின் அம்மையே! பக்தர் எம்
வேண்டுதல்கள் தீருமம்மா!

வெட்டிவயல் வளவன்



# எதிர்நோக்கின் திருப்பயணி அன்னை மரியா

எந்த ஒரு பயணத்தையும் தொடங்கு வதற்கு முன்பாகவும் அதனை அன்னை மரியாவுக்கு அர்ப்பணிப்பதையும், அது நிறைவுற்றதும் அன்னை மரியாவுக்கு நன்றி கூறுவதையும் வழக்கமாகக் கொண்டவர் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இந்த ஆண்டு நாம் கொண்டாடும் "நம்பிக்கையின் யூபிலி-2025" -ஆம் ஆண்டிற்கான ஆணை மடல் ஒன்றை 'SPES NON CONFUNDIT - எதிர் நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது" (உரோ 5:5) என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2024 -ஆம் ஆண்டு மே மாதம் 9-ஆம் நாளன்று வெளியிட்டார். திரு அவையின் நம்பிக்கையாளர்களாகிய நாம் அனைவரும் இவ்வாண்டை நம்பிக்கை ஆண்டாகவும், அதனை "எதிர் நோக்கின் திருப் பயணிகள்" எனும் கருப்பொருளில் சிந்தித்துப் பயணிக்கவும் அவர் நமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

25 முத்தான வழிகாட்டுதல்களைக் கொண்ட தனது ஆணை மடலில் 24-வது கருத்தாக இடம்பெற்றிருப்பது "எதிர்நோக்கின் திருப்பயணி அன்னை மரியா" என்பதாகும்.

**எதிர்நோக்கின் உச்ச சாட்சியாய் அன்னை மரியா**

திரு அவையில் ஏறக் குறைய 1600 இற்கும் மேற்பட்ட பெயர்களில் அழைப்பதும், விழாக் கொண்டாடுவதும் மற்றும் ஆலயங்கள் கட்டி அவர் பாதுகாப்பிலும் அரவணைப்பிலும் வாழ்வதும் கத்தோலிக்கத் திரு அவையில் நடை முறையில் உள்ளது. ஏன்? கி.பி. 431-இல் எபேசு நகரப் பொது அவையில் "அன்னை மரியா கடவுளின் தாய்" என்று உறுதி செய்யப்பட்டு மறைக்கோட்பாடாக அறிவிக்கப்பட்டது. "மரியா இறைவனின் தாய்" என்பது நம்பிக்கை கோட்பாடு மட்டுமல்ல, அதேவேளையில் என்றென்றும் "மனிதரில் கடவுள், கடவுளில் மனிதர்" என்பதன் நம்பிக்கையின் கோட்பாடாகவும் இருக்கிறது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். எதிர்நோக்கு என்பது இறையியல் நல்லொழுக்கம், நற்செயல்களில் தன்னைத் தாரை வார்ப்பது, கண்களால் காண முடியாத ஒன்றைக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்வதாகும்.

**கடவுளின் விருப்பத்தை ஏற்று செயற்பட்டவர் அன்னை மரியா (லூக் 1:26-38)**

கபிரியேல் வானதூதரின் வார்த்தைகளை இதயத்தில் ஏற்றுக்கொண்ட அன்னை மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று கூறி, இறைவனின் மீட்புத் திட்டத்திற்குத் தன்னையே முற்றிலுமாகக் கையளித்தார் கீழ்ப்படிந்து நடந்தார். உடலால் கருத்தரிக்கும் முன்பே உள்ளத்தால் கருத்தரித்தார் மண்ணுலகிற்கு மீட்பு உண்டாகக் காரணமாக இருந்தார், இணை மீட்பரானார்.

**தேவையில் இருப்பவருக்கு உதவும் நல்லுள்ளம் கொண்டவர் அன்னை மரியா (லூக் 1:39-45)**

உதவி என்பது பிறர் தேவையை உள்ளுணர்ந்து, தன்னலமின்றி விரைந்து சென்று உதவுவதாகும். உள்ளுணர்தல் என்பது பிறர் சொல்லித் தெரிந்துகொள்வதல் கேளாமலேயே உணர்ந்துகொள்வது. விரைந்து செல்லுதல் என்பது உதவி தேவைப்படும் அந்த நொடியிலேயே விரைந்து சென்று உதவுதலாகும். வயதான நிலையில் எலிசபெத்து கருவுற் றிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் 130 கி.மீ. நடைப்பயணம் மேற்கொண்டு, மூன்று மாதங்கள் தங்கி உதவுகிறார். "பணிவிடை பெற அன்று, பணிவுடை புரியவே வந்தேன்" (மாற் 10:45) எனும் தனது மகனின் வார்த்தைக்கு உயிர் கொடுத்தவர் அன்னை மரியா.

**இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்ந்தவர் அன்னை மரியா (மத் 12:46-50)**

சிமியோன் இறைவாக்கினரின் (லூக் 2:34-35) வார்த்தைகளைக் கேட்டபோதும், ஏரோதின் வார்த்தைகளைக் கேட்டபோதும் (மத் 2:14-15) உள்ளத்தில் வருத்தங்களையும் கவலைகளையும் எதிர் கொண்ட பொழுதிலும், கடவுளுடைய அருளால், ஆறுதலால், அவரது இரக்கத்தால், கனிவால் அனைத்தையும் தாங்கினார்.

**அருட்பணி வி.பாஸ்காலிஸ்**


எனவேதான் சிலுவை யடியில் அன்னை மரியா தாயிருக்க பிள்ளை சாகும் சங்கடங்கள் கொஞ் சமோ! சாட்டையாலே வேட்டை யாடி சாவதென்றால் தாங்குமோ! அப்படி இருந்தும் அன்னை அமைதி காத்தார். எதிர்நோக்கின் திருப்பயணிகள் துன்பத்தைத் தாங்கிக்கொள்வர். அன்பு செய்வர். அன்னை மரியா அனைத்தையும் தாங்கினார். கடவுளையே சுமக்கின்ற பேற்றினைப் பெற்றார்.

**புது வாழ்வின் எதிர்நோக்கு அன்னை மரியா**

கானாவூர் திருமண விழா அன்னை மரியாவின் சமூக அக்கறை மற்றும் ஈடுபாட்டுக்கான ஒரு சிறந்த உதாரணம். அன்னை மரியாவின் எதிர் நோக்கு சமூக ஈடு பாட்டை இந்த உலகிற்கு உரக்கச் சொல்கிறது. திருமண நிகழ்வில் திராட்சை இரசம் நிரப்பப் பட்ட ஆறு கற்சாடிகள் என்பது குறை யுள்ள எண். அவற் றில் விளிம்புவரை நிரப்பப்பட்ட நீர் இரசமாய் மாறியது நிறைவின் வெளிப்பாடு. குறை யுள்ளதை நிறைவாக்கியவர் அன்னை மரியா. இயேசுவின் மாட்சி வெளிப் படக் காரணமாக இருந்தவரும் அவரே. வாழ்க்கையில் பல்வேறு தருணங்களில் திராட்சை இரசம் தீர்ந்து வாடும் நமக்காகப் பரிந்து பேச அவர் நம்மோடு இருக்கிறார். மனித மாண் பிழந்து, அடிப்படை உரிமைகளை இழந்து நிற்கும் மக்களின் சார்பாக, குரல் இழந்தவர்களின் குரலாக வாழ நம்மை அழைக்கிறார். பிளவுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் களைந்து, வாழ்வில் "திராட்சை இரசம்" இன்றி இருப்போருக்காகக் குரல் கொடுக்க நம்மை அழைக்கிறார். சமூகத்தில் பாதுகாப்பற்ற பெண்கள், சிறார்கள், பாலினப் புதுமையினர், புலம்பெயர்ந்தோர், கையறு நிலையிலுள்ளோர் யாவரும் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட நம்மை அழைக்கிறார்.

சமூக அரசியல், தீய சக்திகளோடு போராட திறனின்றித் தவிக்கும் ஏழை எளியவர்கள், போதை பொருட்களுக்கும் சமூக ஊடகங்களுக்கும் அடிமையானவர்கள் - இவர்களுக் கெல்லாம் உற்ற துணையாய் தானிருப்பதாக மெக்சிகோ நாடு குவாட லூப்பே நகர் காட்சியில் கடவுளின் தாயாக "உன் தாய் நான் அருகில் இல்லையா?" (Nican Mopohua, No.119) எனத் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். நம்பிக்கையோடு திருப்பயணத்தில் தளர்வுறாது எதிர்நோக்கிச் செல்வோம். நம் வாழ்வில் தடைகள் இருக்கலாம் பக்குவமாய்த் தாண்டிச் செல்வோம். பயம் இருக்கலாம் பதறப்படாமல் முன்னோக்கிப் பயணிப்போம். நம் தாய் நம்மோடு இருக்கிறார். திருத்தந்தை குறிப்பிடுவதுபோல, நம் இதயங்களிலும் இல்லங்களிலும் "உள்ளே வாருங்கள் அன்னையே" என்று அவரை வாயார அழைப்போம். நாளை என்பது நலமாய் விடியும். நம்பிக்கைதானே வாழ்க்கை! நம்பிக்கையோடு பயணிப்போம்.

## கூட்டியக்கத் திரு அவையில் திருத்தந்தை பிரான்சிஸ் போற்றும்
# பெண்ணிய மாண்பும் சமத்துவமும்



திரு அவையின் தலைமைத்துவ வரலாற்றில், பணிநிலை பங்களிப்பு சமத்துவத் திரு அவைக்கான முன் முயற்சியில் இச்செயல்பாடு மிகவும் போற்றுதற்குரிய செயற்பாடாக அமைந்திருந்தது.

இந்தச் சூழலில்தான் 2025ஆம் ஆண்டு யூபிலி ஆண்டாக மலர்ந்திருக்கும் வேளையில் அருட்சகோதரி சிமோனா பிரம்பில்லா அவர்களை ஜனவரி 6-ஆம் திகதி திருக்காட்சிப் பெருவிழா அன்று துறவியர் மற்றும் அர்ப்பணிக்கப்பட்டோரின் பேராயத்துக்கான தலைவராகத் திருத்தந்தை நியமித்துள்ளார்.

**அருட்பணி மைக்கல்ராஜ்**

2013-ஆம் ஆண்டு திருத்தந்தையாகப் பொறுப்பேற்றதிலிருந்து திரு அவையைக் கூட்டியக்கத் திரு அவையாக இயங்கச் செய்ய திருத்தந்தை பிரான்சிஸ் மேற்கொண்டுள்ள செயற்திட்டங்களில் சிறப்பிடம் பெறுவது பெண்களுக்கான தலைமைத்துவமும் பாலின சமத்துவமும் என்றால் அது மிகையாகாது.

2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27- ஆம் நாள் நிறைவு பெற்ற 16-வது அகில உலக ஆயர் மாமன்றத்தின் நிறைவில், ஆயர் மாமன்ற உயர்மட்டக் குழுவை (General Secretariat of the Synod) திருத்தந்தை அறிவித்தபோது. ஆயர் அல்லாத இரண்டு நபர்களைத் (பெண்களை) திருத்தந்தை அறிவித்தார். மொத்தம் 17 நபர்கள் கொண்ட இந்த அமைப்பில் 15 ஆயர்களுடன் ஆயர் அல்லாதவர்களும் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் இருவரும் பெண்கள் என்ற தனிச் சிறப்பில், ஒருவர் ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த மரியா லியா ஜெர்லினோ பொதுநிலைப் பெண்மணியாவார். மற்றொருவர் ஆளுநரின் மறைப்பரப்பு அருள்சகோதரிகள் அவையைச் சார்ந்த முன்னாள் தலைமை அருட்சகோதரி சிமோனா பிரம்பில்லா ஆவார். திருத்தந்தையின் சமத்துவப் பார்வைக்கும், கூட்டியக்கத் திரு அவையின் பாலினச் சமத்துவத்துக்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இதுவரை திரு அவையின் வரலாற்றில் 2025 ஆண்டு காலப் பயணத்தில் கூட்டியக்கத் திரு அவையைச் செயற்பாட்டு நிலைக்குக் கொணரும் நம் திருத்தந்தையின் செயற்திட்டங்களில் இது ஒரு புரட்சி என்றே கருதப்படுகிறது. இதுவரை கர்தினால்களும் பேராயர்களும் ஆயர்களும் மட்டுமே வத்திக்கான் திருப்பீடப் பேராயங்களுக்குத் (Vatican Dicastries) தலைவர்களாக நியமிக்கப்பட்டிருந்த நிலையில், இப்போது ஒரு பெண்ணை, ஓர் அருட்சகோதரியைத் துறவியர் பேராயத்துக்கான தலைமைப் பொறுப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் நியமனம் செய்திருப்பது,

இந்த யூபிலி ஆண்டில் அவர் காட்டும் சமத்துவப் பார்வை, பெண்ணிய மாண்பு போற்றப்பட முன்வைக்கும் வழிகாட்டுதல் எனப் பெருமையோடு குறிப்பிட வேண்டும். 2023-ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பேராயத் தின் செயலராக அருள்சகோதரி சிமோனா பிரம்பில்லா அவர்கள் பணியாற்றி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு அவைச் சட்டத்தின் வழி காட்டுதல்படி திருப்பீடப் பேராயங்களுக்கான தலைமைப் பொறுப்பில் ஆயர் நிலையில் இருப்பவர் ...

(தொடர்ச்சி 6ம் பக்.)




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

*(டினேஸ், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: 84, 85 மன்னார்ப் படுகொலைகள் சொல்வதென்ன? என்ற நூலை அக்காலப் பகுதியில் மன்னார் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நாற்ப தாம் ஆண்டு நினை வேந்தலுக்காகக் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி வெளியிட்டிருக்கிறீர்கள். நடைபெற்ற படுகொலைகளை நினைவுகூர்வதால் என்ன நடக்கப் போகின்றது! அவற்றை மன்னித்து நடக்கவேண்டாமா என்ற ஒரு கருத்தும் இருக்கின்றது. இதுபற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

**ப:** டினேஸ், குற்றம் செய்தவர் மன்னிப்புக் கேட்கும் சந்தர்ப்பத்தில் மன்னிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. தவறிழைத்தவர்கள் மன்னிப்புக் கேட்கும் பட்சத்தில் நிச்சயமாக மன்னிக்க வேண்டும், மன்னிப்பளிக்க முடியும். 'ஏழு தடவைகளல்ல எழுபது தடவைகள்' என்றாலும் மன்னிப்பளிக்க வேண்டும். இது யேசுவின் எதிர்பார்ப்பு, படிப்பினை, வாழ்க்கை முறை, ஆகவே அது நமது வாழ்க்கைநெறி. ஆனால், தவறிழைத்தவர்கள் இப்பெரும் படுகொலைகளைப் புரிந்தவர்கள் இற்றைவரை நாற்பது ஆண்டுகளாகியும் மன்னிப்புக் கேட்காத நிலையில், தாங்கள் செய்த படுபாதகத்திக்கு சிறு அனுதாபத்தைக் கூடத் தெரிவிக்காத நிலையில், அப்பெரும் கொடுமைகளின் தார்ப்பரியத்தைக் கிஞ்சித்தும் உணர்ந்து கொள்ளாத நிலையில், எப்படி மன்னிப்பது? அடுத்த முக்கியமான கேள்வி, யாரை மன்னிப்பது? மேலும், செய்யப்பட்ட படுகொலைகளுக்குப் பரிகாரம் செய்யப்பட வேண்டாமா? அவற்றுக்கு நீதி வழங்கப்பட வேண்டாமா? 'இறந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிப்பதும் வாழ்வோரை எச்சரிக்கை செய்வதும்' அதாவது இப்பேர்ப்பட்ட கொடுமைகள் இனிமேலும் நடக்க வாய்ப்பளிக்கக்கூடாது என வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டிருப்பதும் இந்நினைவேந்தல்களின் நோக்கமல்லவா. அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கவில்லை என்றால், குற்றம் புரிந்தவர்களின் குற்றத்தைப் புரியவைக்கவில்லை என்றால் கொல்லப்பட்டவர்களுக்கு நாம் செய்யும் அநீதியாகவே கருதப் படவேண்டும். ஆக, நீதி கிடைக்கும் வரை மட்டுமல்ல, நீதி கிடைத்துப் பரிகாரம் செய்யப்பட்ட பின்னரும் இந் நினைவேந்தல்கள் தொடரப்பட வேண்டும். ஏனெனில் வாழ்வோரை அந்நினைவேந்தல்கள் எச்சரிக்கை செய்தவண்ணம் இருக்கவேண்டும் என்பதற்காகவும் இறந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிப்பதற்காகவும்! நினைவேந்தலின் நினைவு கூரல்களின் இன்றியமையாத் தேவையும் அவசியமும் புரிகிறதா, டினேஸ்?

*(சேகர், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: உங்கள் கேள்விகளையும் பதில்களையும் வாசித்து சிரிசிரியென்று சிரித்து மகிழ்கின்றோம். இப்படியெல்லாம் எப்படி எழுதுகின்றீர்கள்?**

**ப:** 'சேகர் செத்தான்!' முதலில் "உங்கள் கேள்விகளையும் பதில்களையும்" என எழுதியிருக்கிறீர்கள். பதில்கள்தான் என்னுடையதே தவிர கேள்விகள் எல்லாம் பலருக்கும் சொந்தமானவை. நிற்க, நான் 'சீரியஸ்'சாக எழுதும்போது நீங்கள் சிரிசிரியென்று சிரித்து மகிழ்வதாக எழுதியிருக்கிறீர்கள்! சிப்பிக்குள் இருக்கும் முத்தையும் பார்க்கத் தவறாதீர்கள்! அதாவது, சிரிப்புக்குள் வைத்திருக்கும் சிந்தனையையும் எண்ணிப்பாருங்கள்.

*(வசந்தி, யாழ்ப்பாணம்)*

**கே: நினைவுகூர்தல் நிகழ்வுகள் இக்காலத்திலும் அவசியமானவையா?**

**ப:** வசந்தி, உங்களுக்கு நெருக்கமானவர் உங்களை விட்டுப் பிரிந்தால் அவர்களை நினைவுகூர மாட்டீர்களா? நிச்சயமாக நினைவு கூருவீர்கள்தானே! நினைவுகூருவதோடு மட்டுமல்லாது அவர்களின் நினைவாக, நினைவுச் சின்னங்களை வழங்கவோ, நினைவுரைகளைச் செய்யவோ, நினைவு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தவோ செய்வீர்கள். அதுபோலதான் சில பொது நிகழ்வுகளை - படுகொலையாக இருக்கலாம், மக்களால் மறக்கமுடியாத வலி நிறைந்த நாளாக இருக்கலாம் உதாரணமாக மே 18 அல்லது மாவீரர் நாள். எதுவாக இருந்தாலும் அவற்றை நினைவுகூர்வது பொருத்தமானது. ஏனெனில் இது இழப்புக்களைச் சந்தித்தவர்களுக்குப் பெரும் ஆற்றுப்படுத்தலாக அமையும் (இத்துடன் முதலாவது கேள்விக்கான விடையையும் தயவுசெய்து வாசியுங்கள்). அத்துடன், இன்னுமொரு வகையில் விளக்குவதானால், நினைவை இழந்தவர்களின் நிலையை 'அறளைபேந்து போச்சு', 'மாறாட்டத்தில் இருக்கிறார்' என்கிறோம். நினைவை இழப்பது வாழ்வை இழப்பதற்குச் சமன். நினைவுகூரல், நினைவேந்தல் நிகழ்வுகளை வைத்து 'அரசியல் நடத்தாமல்' அவற்றை ஆக்கபூர்வமான நிகழ்வுகளாக ஆக்கினால் அந்நிகழ்வுகளின் வரலாற்றுச் சான்றுகளிலிருந்து கற்றுணர்ந்து பல படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

*(அனு, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: 84, 85 மன்னார்ப் படுகொலைகள் சொல்வதென்ன? என்ற நூலைக் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் எழுதி மன்னார்ப் படுகொலைகள் நினைவேந்தல் நிகழ்வில் வெளியிட்டிருக்கிறீர்கள். இவற்றின் மூலம் மன்னாரில் வாழுகின்ற பலரும், மன்னாருக்கு வெளியி லும், குறிப்பாக, இளையோர் இக்காலத்தில் இடம்பெற்ற அரச அராஜகங்களை அறியக்கூடியதாக இருக்கின்றது. இப்பேர்ப்பட்ட பணிகளைத் துணிந்து செய்வதற்கும் ஒரு துணிவு வேண்டும்! திருச்சபையில் உயர் பதவி நிலைகளில் இருக்கும் பலரும் செய்யத் துணியாத விடயங்களைச் செய்வதற்கு உங்களால் எப்படி முடிகிறது?**

**ப:** அனு, அது அவன்தரும் ஆற்றல். இவற்றைச் செய்யத் தவறினால் காலத்திற்கும் கடவுளுக்கும் கணக்குக் கொடுக்கவேண்டி வரும்! அந்தவகையில்தான், இப்பேர்ப்பட்ட விடயங்களை நோக்கவேண்டும். ' சிந்தப்பட்ட இரத்தம் மண்ணிலிருந்து அழுகுரல் எழுப்பிக் கொண்டிருக்கிறது!' (தொடக்கநூல் 3/10) என்ற வார்த்தைகளை மறந்துபோக முடியாது, மறக்கவும் கூடாது!

*(காயா, மன்னார்)*

**கே: உண்மையான வாழ்க்கையை இன்று பலரும் வாழ்ந்து அனுபவிப்பதாகத் தெரியவில்லை! ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம், சாவோம் என்று வாழ்க்கை போகிறதாகவே பலரும் உணர்ந்து கொள்கிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

**ப:** காயா, உங்கள் அவதானிப்புச் சரியானதே. அதேவேளை இது பொதுவான ஒரு கருத்தும் இன்றைய வாழ்க்கை பற்றிய கணிப்பும். உண்மையில், சுடுதண்ணி குடிச்ச நாய்மாதிரி ஓடித்திரிவதிலேயே இன்று பலருடைய வாழ்க்கை கனிந்து போகிறது அல்லது முடிந்துபோகிறது. எமர்சன் என்பவர் கூறிய ஒரு கூற்றுத்தான் நினைவுக்கு வருகிறது: 'நாம் எப்போதும் வாழ்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம் ஆனால் வாழ்வதில்லை!' ●

# கூட்டியக்கத் திரு அவையில்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

களே நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நிலையை மதிக்கும் வண்ணம், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சலேசியத் துறவியான கர்தினால் ஏஞ்சல் பெர்னாண்டஸ் அந்திரே அவர்களை, துறவியர் மற்றும் அர்ப்பணிக்கப்பட்டோரின் திருப்பீடப் பேராயத்துக்கு இணைத்தலைவராக (Pro-Perfect) சனவரி 6-ஆம் தேதி அறிவித்துள்ளார் நம் திருத் தந்தை பிரான்சிஸ். அருட்சகோதரி தலைவராகவும் (Prefect), கர்தினால் அவர்கள் இணைத்தலைவராக வும் (Pro-Perfect) திரு அவையில் திருப்பீடப் பேராயங்களில் இதுவரை நிகழ்ந்திராத ஒன்று. இதை விளம்பரத்திற்காகவோ, சுயமதிப்புக்காகவோ, வெற்றுப் புரட்சிக்காகவோ செய்யாமல் திரு அவையின் வடிவத்திலும் இயல்பிலும் பணியிலும் பங்கேற்பிலும் புதுப்பித்தலையும் சமத்துவத்தையும் கொண்டு வரும் நம் திருத்தந்தையின் சீரிய முயற்சியின் வழிகாட்டுதலின் எதார்த்தமே!

இந்தப் புதிய நியமனங்கள் போன்று திரு அவை அனைத்து மட்டங்களிலும் நிகழ வேண்டும் என்பதே அவர் விருப்பம். துறவியர் பேராயத்துக்கான உதவிச் செயலர்களாக நியமனம் பெற்றிருப்பவர்களில் ஒருவர் கிளரீசியச் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் அயிட்டோர் ஜிமெனெஸ் ஒச்சாவே அவர் களோடு மற்றொரு அருள்சகோதரி கார்மென் ரோஸ் நோர்த்தெஸ் அவர்களும் இடம்பெற்றிருப்பது பாலினச் சமத்துவத்தையும், திரு அவையின் இணைந்த பங்களிப்பையும் அனைத்து நிலையினரின் பங்கேற்பையும் எடுத்துக் காட்டுகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் திரு அவையில் பெண்களுக்கான சமத்துவத்தையும், அவர்களின் தலைமைத்துவப் பங்கேற்பையும் ஈடுபடுத்த வத்திக்கானின் உயர்மட்டப் பொறுப்புகளில் பல்வேறு அருட்சகோதரிகளையும், பொதுநிலை சகோதரி களையும் ஏற்கெனவே நியமித்திருப்பதையும் இங்கே பெருமையோடு நாம் நினைவுகூர வேண் டும். வத்திக்கான் அரசுப் பணியில் (Government of the Vatican city state) இரண்டாவது உயர் தலைமைப் பொறுப்பில் பிரான்சிஸ்கன் அருட்சகோதரி இரபேலா பெத்ரினி அவர்கள் ஏற்கெனவே பணியாற்றுவது இங்கே நோக்கத்தக்கது. இந்தப் பொறுப்பில் முதல் பெண்ணாக இவர்தான் நம் திருத்தந்தையால் நியமனம் செய்யப்பட்டவர். அது போலவே, ஒருங்கிணைந்த மானிட மாண்பு மற்றும் வளர்ச்சிக்கான ஆணையத்தின் ஆலயங்களில் உயர் பொறுப்பில் அருட்சகோதரி அலெக்சாந்த்ரா ஸ்மெரில்லி அவர்களும், அகில உலக ஆயர் மாமன்றத்தின் துணைச் செயலராக அருள்சகோதரி நற்காலி பெக்குவார்ட் அவர்களும் பணியாற்றி வருகின்றனர். அருள்சகோதரிகள் மட்டுமல்லாது பொதுநிலைச் சகோதரிகள் (Laywomen) கபிரியோ கம்பினோ, லிண்டா கிசோனி இருவரும் பொது நிலையினர், குடும்பம் மற்றும் மானிட வாழ்வுப் பேராயத்துக் கான துணைச் செயலர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

உடனடியாகத் திரு அவையின் திரு நிலைகளில் பெண்களை ஈடுபடுத்தி பணிகளில் சமத்துவத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற அழைப்புக்கு, திருத்தந்தையின் முன்முயற்சியாகவும், அவரின் நேரியச் செயல்பாடாகவும் இது பார்க்கப்படுகிறது. இந்தச் சமத்துவமும் பங்களிப்பும் பங்கேற்பும் தலத் திரு அவைகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே நமது அவா!

# சிலுவை

**சர்வத்தின் வாழ்வியல்**
**நிலையற்றதாகும்,**
**சத்தியமும் நித்தியமும்**
**மானிடமாகும்,**
**அடிப்படையின் வாதம்**
**வெளிப்படையாகும்**
**பத்தியத்தின் நிதர்சனம்**
**நிதானமாகும்.**

**மண்ணுக்குள் உடலாகும்**
**விண்ணுக்குள் ஆவியாகும்**
**கட்டிப்போடும் சினமும்**
**கட்டுப்பாட்டுக்குள் குணமும்**
**மீட்சி தருவதாகட்டும்,**
**மீட்பர் யுக முடிவில்**
**வருவதாகட்டும்**
**ஜெபம் மிதமாகும்.**

**எந்த மரத்திலாவது சீவட்டும்,**
**சிந்தனையின் அறமாகட்டும்**
**எல்லோரித்திலும்**
**அன்பு பெருகட்டும்**
**ஆழம் கரையாகட்டும்**
**நிறைவேற்றும் பரிசுத்தம்**
**முதுகெலும்பில் அடை-**
**றயப்பட்டட்டும் சிலுவை.**

# 2025 சாட்டி திருத்தல தவக்கால தியானம் பற்றிய அறிவிப்புக்கள்

வருடா வருடம் சாட்டித் திருத்தலத்தில் தவக்காலத்தின் சனிக்கிழமைகளில் நடைபெறும் தியானங்களில் மறைக்கோட்டப் பங்குகளை உள்ளிணைப்பது வழக்கம். இதற்குத் தங்களது ஒத்துழைப்பை நல்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். அந்த வகையில், இந்த வருடத்திற்கான எங்களுடைய தியான தினங்களை உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். மறைக்கோட்ட மட்டத்தில் உங்கள் பங்குகள் இத் தியானத்தில் இணைய விரும்பினால் தயவு செய்து எங்களோடு தொடர்புபடுத்துங்கள். மறைக்கோட்டத்தோடு சில பெரிய பங்குகளையும் தனித்து இணைந்துள்ளோம்.

| மறைக்கோட்டம் | திகதி | நேரம் |
|---|---|---|
| யாழ்ப்பாண மறைக்கோட்டம் - (பேராலயம், நாவந்துறை பங்குகள் தவிர்த்து) | 08.03.2025 முதல் சனி | 9.00 காலை - 2.00 மாலை |
| தீவகம் | 15.03.2025 இரண்டாம் சனி | 9.00 காலை - 2.00 மாலை |
| முல்லைத்தீவு - கிளிநொச்சி மறைக்கோட்டங்கள் மற்றும் பேராலய பங்கு | 22.03.2025 மூன்றாம் சனி | 9.00 காலை - 2.00 மாலை |
| இளவாலை மறைக்கோட்டம் மற்றும் நாவந்துறை | 29.03.2025 நான்காம் சனி | 9.00 காலை - 2.00 மாலை |
| பருத்தித்துறை மறைக்கோட்டம் | 05.04.2025 ஐந்தாம் சனி | 9.00 காலை - 2.00 மாலை |
| பொது | 12.04.2025 ஆறாம் சனி | 9.00 காலை - 2.00 மாலை |

**மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த சாட்டி திருத்தல், தவக்கால தியானம், பங்குனி மாதம் (மார்ச்), 31ம் நாள், திங்கட்கிழமைஒழுங்கு படுத்தப்படுகிறது.**

- அனைவருக்கும் இலவசமாக அன்னதானம் வழங்கப்படும். விரும்பியவர்கள் காணிக்கை செலுத்தலாம்.

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

மண்ணில் 24 . 09 . 1948

விண்ணில் 31 . 01 . 2025



அமரர்
### அன்ரன் யோசப் மரிஸ்ரெல்லா (மதுரம்)

*நான் இருக்கும் இடத்திலே அவர்களும் என்னோடு இருக்க விரும்புகின்றேன் (அரு. 17:24)*

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 01.03.2025 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கு கொண்டு இவருக்காக செபிக்கும்படியும். தொடர்ந்து யாழ்ப்பாணம் குண்டுக்குழி வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள U.S. விருந்தினர் விடுதியில் நடைபெறம் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கோவில் வீதி,
18 டீ, சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்

AD-71

பிரிவால் துயருறும்
மரியநாயகம் அன்ரன் யோசப்
கணவன், உறவினர்கள்

## விண்ணக வாழ்வில் 5ம் வருட நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1947

உதிர்வு 03 . 02 . 2020



### அமரர் சவரிமுத்து ஆரோக்கியநாதர்

(நிரந்தர மறையாசிரியர்)

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

இல. 76, புலோலி தெற்கு,
புலோலி.

AD-68

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 . 07 . 1959

விண்ணில் 08 . 02 . 2024



### அமரர் றிச்சாட் டானியல் யசிந்தா

*"நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக் கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர்" (தி.பா. 65:4)*

ஓராண்டு எம்மை விட்டுப்பிரிந்து
இறை நிழலில் எப்போதும்
ஆண்டவன் சந்நிதியில்
ஏற்றமுடன் வாழ வேண்டுகின்றோம்

Ad-66

என்றென்றும் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணில் 17 . 04 . 1927

விண்ணில் 25 . 01 . 2025



### அமரர் டானியல் பூரணம்

*"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வர்" (யோவான் 11:25)*

சிரித்த முகத்துடன் எல்லோரையும் அன்போடு வரவேற்கும்
உங்கள் முகம் கண்டு முப்பத்தியோராம் நாள் ஆனதுவோ
நீங்கள் தந்த மாசற்ற அன்பினையும்
மட்டற்ற அக்கறையினையும் ஒருபோதும் மறவோம்
இறைவனின் இல்லமதை அலங்கரிக்கச் சென்ற நீங்கள்
இறைவனின் அன்பில் நித்தமும் மகிழ்ந்திருக்க
மூவொரு இறைவனை இடைவிடாது இறைஞ்சுகின்றோம்

மல்வம்,
உடுவில்

Ad-69

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 5ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 24 . 08 . 1959

விண்ணில் 22 . 02 . 2020



அமரர்
### ஷிவோன் நாளினி ரவீந்திரன்

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

AD-67

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 . 06 . 1957

விண்ணில் 22 . 02 . 2024



### அமரர் பயஸ் வின்சன் ஜோசவ் (துரைநாயகம்)

*"நாம் வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கின்றோம்" (உரோமையர் 14:8)*

கருணைக் கடலாகிய இறைவா!
எமது அன்பின் திருவுருவாய். பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
நல்ல ஒரு குடும்பத் தலைவனாய் வாழ்ந்த எம் அப்பாவை நீர் உம்மிடம்
அழைத்துக் கொள்ளத் திருவுளமானீர்.
அன்புத் தந்தையே! எம் அப்பாவின் பாவக்கறைகளை நீக்கி
உம்முடைய நித்திய பேரின்ப வீட்டிற் சேர்த்து அவருக்கு நித்திய சாந்தி
அளித்தருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம்
ஆமென்.

புதுவீதி, கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்.

Ad-70

என்றென்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

## மயிலிட்டி புனித காணிக்கை மாதா ஆலயத் திருவிழா



இலங்கைப் படையினரின் ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயிலிட்டி புனித காணிக்கை மாதா ஆலயத் திருவிழா 13 வருடங்களுக்குப் பின் கடந்த 02ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை சுதர்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் திருவிழாத் திருப்பலி இடம்பெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபப் பவனி நடைபெற்றது. இந்நிகழ்வில் 500க்கும் அதிகமான கத்தோலிக்க இந்து மத மக்கள் கலந்து செபித்தனர்.

## டொன் பொஸ்கோ திருவிழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்



கிளிநொச்சி பல்லவராயன்கட்டு டொன் பொஸ்கோ நிறுவனத்தில் முன்னெடுக்கப்பட்ட டொன் பொஸ்கோ திருவிழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 31ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை மெல்வின் றோய் மற்றும் டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலைய அதிபர் அருட்தந்தை கஜன் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து திருவிழா திருப்பலியை தலை மைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியை தொடர்ந்து கல்விய கத்தில் கணினி, ஆங்கிலம், கேக் ஐசிங் மற்றும் ஆரிவேர்க் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்கள் மற்றும் டொன் பொஸ்கோ ஆங்கிலப் பாடசாலையில் 2024ஆம் கல்வியாண்டில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் ஆகியோ ருக்கான சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. Mosvold Martinus Foundation நிறுவன நிறுவுனர் திரு. நிமால் மாற்றினஸ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற், ஒமேகா லைன் நிறுவன தலைவர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் ஒமேக்கா லைன் பணியாளர்கள், பூநகரிப் பிரதேச செயலர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மா ணவர்கள், பழைய மாணவர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கணிதபாட செயலமர்வு



போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன கல்வி உதவித்திட்டத்தின் கீழ் முன் னெடுக்கப்பட்ட இவ்வருடம் கா.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிதபாட செயலமர்வு கடந்த மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடை பெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை மைக் மயூரன் அவர்களின் உதவியுடன் இடம்பெற்ற இக்க ருத்தமர்வில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி கணித பாட ஆசிரியர்கள் திரு நந்திவர்மன் மற்றும் திரு. கஜீபன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து மாணவர்களை நெறிப்படுத்தினார்கள். இக்கருத்தமர்வில் 135 வரையான மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர். இந் நிகழ் வுக்கான நிதி அனுசரணையை இலங்கை கரித்தாஸ் செடெக் நிறுவனத்தினூடாக கரித்தாஸ் கொரியா நிறுவனம் வழங்கியிருந்தது

## மட்டுவில் புனித லூர்து அன்னை ஆலயத் திருவிழாவும் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வும்



சாவகச்சேரி மட்டுவில் புனித லூர்து அன்னை ஆலயத் திருவிழா கடந்த 4ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை ஞானேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 3ஆம் திகதி நற்கருணைவிழாவும் நடைபெற்றது. நற்கருணைவிழாத் திருப்பலியை புலோப்பளை பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ச் அவர்களும் திருவிழாத் திருப்பலியை குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து அங்கு புதிதாக அமைக்கப்படவுள்ள ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் அடிக்கல்லை நாட்டிவைத்தார். நூற்றாண்டு பழமைவாய்ந்த முருகைக்க ல்லால் அமைக்கப்பட்ட தற்போதைய ஆலயம் கடந்தகாலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருச்சிலுவைக் கன்னியர் சபைக்கு புதிய மாகாண முதல்வி



திருச்சிலுவைக் கன்னியர் சபையின் புதிய மாகாண முதல்வியாக அருட்சகோதரி மனப்பு பௌலீனா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது பணிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு கடந்த 02ஆம் திகதி நீர்கொழும்பு தலுவகொட்டுவவிலுள்ள தலைமை அலு வலகத்தில் நடை பெற்றதுடன் அன்றைய தினம் இவருடைய ஆலோசகர்களாகவும் 05 அருட்சகோ தரிகள் பதவியேற்றனர். அத்துடன் சபையின் புதிய அருட் சகோதரிகளான மோகனா, தனுசினி ஆகியோர் கடந்த 01ஆம் திகதி தமது முதலாவது துறவற வார்த்தைப் பாட் டை தலைமை அலுவலகத்தில் நிறைவேற்றினார்கள்.

## யூபிலி ஆண்டிற்கான திருப்பயணம்



மானிப்பாய் திருக்குடும்ப பிள்ளைகளுக்காக முன் னெடுக்கப்பட்ட யூபிலி ஆண்டிற்கான திருப்பயணம் கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது. மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் மட அருட்சகோதரி நீற்றா அந் தோனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடை பெற்ற இந்நிகழ்வில் பிள்ளைகள் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம், பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை திருத்தலம், சில்லாலை புனித யோசப்வாஸ் ஆலயம், புனித கதிரை மாதா ஆலயம், மாதகல் கெபி மற்றும் இளவாலை நட்பு மண் பூங்கா ஆகிய இடங்களைத் தரிசித்தனர். இந்நிகழ்வில் 45 பிள்ளைகள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## அருட்சகோதரர்களுக்கு ஊடகத்துறை களப்பயிற்சி



யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி 04ஆம் வருட மாணவர்கள் ஊடகத்துறை சார்ந்த கள அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வு யாழ். மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தில் கடந்த 03ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெற்றது. ஊடக மைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிக ழ்வில் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்தந்தை எயின்ஸிலி றொஷான், வலம்புரி பத்திரிகை ஆசிரியர் திரு. விஜயசுந்தரம், ஈழத்து குறும்பட இயக்குநர் திரு. மதிசுதா, உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. பிரபாகரன், திருமதி பிறைநிலா கிருஸ்ணராஜா மற்றும் திருமதி. அனுதர்சி கபிலன், ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து பத்திரிகை த்துறை, புலனாய்வு பத்திரிகையியல், புகைப்படத்துறை, வலைத்தள பாதுகாப்பு, குறும்படம், அச்சு ஊடகம், போன்ற தளங்களில் அருட்சகோதரர்களை நெறிப் படுத்தினர். இந்நிகழ்வில் ஒளி, ஒலிப்ப திவு, படத்தொகுப்பு, சமூகவலைத்தள நிகழ்ச்சித் தயாரிப்பு, செய்திவாசிப்பு, ஊடக தொழில்நுட்ப செயற்பாடுகள், குறும்படத் தயாரிப்பு, செய்தி உருவாக்கம், போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

## இறையியல் மாணவர்களுக்கான கள அனுபவப் பயிற்சி



யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி நான்காம் வருட இறையியல் மாணவர்களுக்கான சமூகப் பணிகளின் கள அனுபவப் பயிற்சி கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தர் திரு. சண்முகலிங்கன், அரசறி வியல் துறைத் தலைவர் திரு. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் திரு. நிலாந்தன், உளநல மருத்துவர் திரு. சிவதாஸ், எழுத்தாளர் திரு. யோசப்பாலா, விலங்கிய ல்துறை பேராசிரியர் ராஜேந்திரமணி, மகளிர் அபிவி ருத்தி மாவட்ட இணைப்பாளர் உதயணி மற்றும் கியூ டெக் பணியாளர்கள் வளவாளர்களாகக் கலந்து கருத் துரைகள், அனுபவ பகிர்வுகள், களத்தரிவிப்புக்கள் ஊடாக அருட்சகோதரர்களை நெறிப்படுத்தியிருந்தனர்.

## யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்புவிழா



யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா கடந்த 09ம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி. மேரி அஞ்சலா அல்போன்சஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரியில் நுண்கலைப்பாடங்கள் மற்றும் ஓவியக் கண்காட்சி ஆகியவற்றைப் பயின்று சிறப்பு த்தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், கலை நிகழ்வுகளும் ஆசிரியர்கள் கௌரவிப்பும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலை ப்பீட பீடாதிபதி பேராசிரியர் திரு. ரகுராம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் நடன ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி. பத்மினி செல்வேந்திரகுமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

## குருநகர் புனித யோசப்வாஸ் இளையோர் மன்ற கலைவிழா




குருநகர் புனித யாகப்பர் ஆலய புனித யோசப்வாஸ் இளையோர் மன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட கலைவிழா நிகழ்வு கடந்த 09ஆம் திகதி குருநகர் கலையரங்கில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அரு ளானந்தம் யாவிஸ் அவர்களின் வழிநடத்தலில் மன்றத் தலைவர் செல்வன் கிறகோரி ஜெயராஜ் அவர்களின் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளும் கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு மாசி மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.